1. அந்த அனைத்து வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் "விண்ணப்பதாரரது வயது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் வயது வருடங்கள் 30 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 50 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும் என்பது "விண்ணப்பதாரரது வயது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் வயது வருடங்கள் 30 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்." என திருத்தப்படுகின்றது.

2. அவ்வாறே மேற்படி வர்த்தமானியில் "பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட (க. பொ. த.) சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் மூன்றுடன் (03) ஆறு விடயங்களில் (06) சித்திப் பெற்றிருத்தல் வேண்டும்." என்பது "பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட (க. பொ. த.) சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்திப் பெற்றிருத்தல் வேண்டும்" எனத் திருத்தப்படுகின்றது.

3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் 01, 02 தவிர விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய அனைத்தும் அவ்வாறே வலுவிலிருக்கும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

03-481

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வர்த்தக திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020

வர்த்தக திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர் வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது 2012.01.07 ஆந் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையிலான PSC/ET/2/1/19/11 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகத் திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைவாக கொழும்பில் 2021, யூன் மாதம் நடாத்தப்படும்.

2. இந்தப் பரீட்சை தொடர்பான பாடவிதானங்களும் ஏனைய ஏற்புடைய ஏற்பாடுகளும் மேற்குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் இணைப்பு II இன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பாடவிதானங்களும் ஏனைய ஏற்பாடுகளும் பரீட்சார்த்திகளின் சௌகரியத்திற்காகக் கீழே தரப்படுகின்றன.

உத்தியோகத்தர் ஒருவரானவர் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட பாடங்களை ஒரே அமர்விலும் அல்லது வெவ்வேறு அமர்வுகளிலும் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3. **பரீட்சை நடைமுறை.-** எழுத்துமூலப் பரீட்சை

| பாடம் | காலப்பகுதி (மணித்தியாலங்கள்) | புள்ளிகள் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| தாபன ஒழுங்குவிதிகள் | 2 | 100 | 40% |
| நிதிசார் ஒழுங்குவிதிகள் | 2 | 100 | 40% |

4. **பாடவிதானம்.-**

| பாட இலக்கம் | பாடம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| 01 | தாபன ஒழுங்குவிதிகள் | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபனவிதிக் கோவை மற்றும் நடைமுறை விதிகளின் அத்தியாயங்கள் I, II, III, V, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII இற்கமைவாக |
| 02 | நிதிசார் ஒழுங்குவிதிகள் | * இலங்கை நிதிக் கட்டுப்பாடு, கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் நியமனம், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் அரச இறைவரி உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்<br>* உள்ளக கணக்காய்வு<br>* அரசாங்க செலவினத்தின் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்<br>* அரசாங்க கொள்கைகள், நோக்கங்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இனங் காணுதல்.<br>* அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதல் மற்றும் அபிவிருத்திக் கருத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.<br>* வருடாந்த இறைவரி மற்றும் செலவினம் மற்றும் இறுதி தீர்மானம் எடுத்தல் தொடர்பான மதிப்பீடுகளினைத் தயாரித்தல்.<br>* அங்கீகரிக்கப்பட்ட செலவின மதிப்பீடுகளில் மாற்றம் செய்தல்<br>* அரசாங்க ஆதனங்களின் நட்டங்களும் பதிவளிப்பும்<br>* அரசாங்க நிதிகளினைப் பொறுப்பில் வைத்திருத்தலும் வங்கி கணக்கீட்டு நடைமுறைகளும்.<br>* வெளிநாட்டு மானியங்களின் மீது அமுல்படுத்தப்படும் கருத்திட்டங் களை முகாமை செய்தல்.<br>* அரசாங்க பெறுகைகள் நடைமுறைகளின் மீதான பொது அறிவு |

**பி. கு.** - பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 40 புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். பரீட்சார்த்தியானவர் ஒரே அமர்வில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களுடன் பரீட்சையில் சித்தியடையலாம்.

5. **பரீட்சை மொழிமூலங்கள்.-**

5.1 இந்தப் பரீட்சையானது சிங்கள மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

5.2 பரீட்சார்த்தியொருவரின் தகைமையானது அவருக்குரித்துடையாகாத மொழி மூலத்தின் அவர் பரீட்சை எழுதியிருப்பது தெரியவருமிடத்து இரத்துச் செய்யப்படும்.

6. விண்ணப்பப் படிவமானது A 4 அளவிலான தாளில் இரண்டு பக்கங்களினையும் பயன்படுத்தி இங்கே தரப்படுகின்ற வடிவத்தின் படி தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் 01 இலிருந்து 05 வரையிலான தலைப்புக்கள் முதற் பக்கத்தில் காணப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினைத் தயாரிக்குகையில், விண்ணப்பத்தின் தலைப்புக்கள் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியுடன் இணங்கிய வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து அவதானம் செலுத்துவதுடன் அனைத்துத் தகவல்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் அத்தகைய விபரங்கள் விண்ணப்பத்தின் உரிய இடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் விண்ணப்பததினை அனுப்புவதற்கு முன்பாக குறித்த பற்றுச்சீட்டானது விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதா என்பது குறித்தும் கவனம் செலுத்தவும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதியொன்றினை வைத்திருப்பது எதிர்காலத் தேவைகளுக்கு பயனுள்ளதாக அமையுமென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

7. பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்திகள் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடத்தலும் வேண்டும்.

8. **பொய்யான தகவல்களை வழங்குதல்.-** இந்த விண்ணப்பத்தில் சரியான தகவல்களை கவனமாக வழங்குதல் வேண்டும். இந்த பரீடசைக்குரிய ஏற்பாடுகளின்படி பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமையானது பரீட்சைக்கு முன்பாகவோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ கண்டுபிடிக்கப்படுமிடத்து அவர் தகைமையற்றவராக கருதப்பட்டு அவரின் பரீட்சார்த்தி தகைமையானது இரத்துச் செய்யப்படும்.

9. பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளருக்கு தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழினைச் சமர்ப்பித்தலானது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். அந்த நோக்கத்திற்காக, கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் அவர்களின் அடையாளத்தினை நிரூபிக்கும் பொருட்டு தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைக்காது மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். மேலும், தமது அடையாளத்தினை நிரூபிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன், பரீட்சார்த்திகள் உரிய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்பாகவும் மண்டபத்தினை விட்டு விலகிச் செல்லும் வரையிலுமான பரீடசையின் முழு நேரத்திலும் தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைத்தலாகாது.

10. விண்ணப்பங்கள் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக் கிளை (நிறுவன ரீதியான வெளிநாட்டுப் பரீட்சை)", பரீட்சைகள் திணைக்களம், இலங்கை, த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2021.04.09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இத் திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். "வர்த்தக திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020" என விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

11. வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளினைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியதன் பற்றுச்சீட்டினை இணைத்து முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையானது அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்படுதல் தொடர்பான அறிவித்தலானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களின் பின்னர் தமது அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அது தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு, விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு அறிவித்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன அத்தகைய விசாரணையினை மேற்கொள்ளும்போது குறிப்பிடப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியானவர் கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், மேற்குறித்த விபரங்களுடனான கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் மூலமாக அனுப்பி வைப்பதனூடாக தொலைநகலினூடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றினை தொலைநகல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு விசாரணை மேற்கொள்கையில், பரீட்சார்த்தியிடம் இருக்கும் தயாரித்துச் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பிரதியினையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியினையும் சமர்ப்பிப்பது ஏற்புடையதாகும். அத்துடன் பரீட்சைத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்துவதற்கு வேறு ஏதேனும் தகவலினைக் கோருமிடத்து விண்ணப்பத்தினை அனுப்பி வைத்த பதிவுத் தபாலின் பற்றுச்சீட்டினையும் சமர்ப்பிப்பது உசிதமானதாகும். அனுமதி அட்டையினை வழங்குவதானது பரீட்சார்த்தியானவர் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியானவர் எனக் கருதப்படுதலாகாது.

12. மேலே 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளினை நிறைவு செய்யத் தவறுகின்ற பரீட்சார்த்திகளினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

13. விண்ணப்பத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அவ்வாறே பரீட்சைக்கான அனுமதி அட்டை என்பன உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தியானவர் குறித்தவொரு நிறுவகத்திலிருந்து அல்லது நிறுவனத்தின் தலைவரிடமிருந்து தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சார்த்தியானவர் தனது

02. (i) தொழில் புரியும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : அனுமதி அட்டை இந்த முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் :-----.

(ii) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

03. தொலைபேசி இல. :

(i) கையடக்க :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) நிலையான :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(ii) பால்

ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

05. அறிவித்தலின் 04 ஆம் பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்ட பாடங்களில் பரீட்சார்த்தி தோற்றும் பாடங்கள் இலக்கத்துடன் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

06. பிறந்த திகதி

(i) வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ii) பதவிப் பெயர் :..............................................

07. முன்னர் பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தோற்றியிருப்பின், அவ்வாறு தோற்றியிருப்பின், பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள், வருடம் மற்றும் மொழிமூலம் என்பவற்றினைக் குறிப்பிடுக.

| பாடம் | வருடம் | மொழி மூலம் | சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

08. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள், ஏதேனுமிருப்பின்.

(i) பற்றுச்சீட்டு இல. : .......................................
(ii) கட்டணம் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகம் :....................
(iii) திகதி :...............
(iv) செலுத்திய தொகை :...................................

பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும்

09. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவையெனவும் நான் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவன் எனவும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். மேலும், இந்தப் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

...................,
திகதி :........................ விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்,

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை வழங்கியுள்ள விண்ணப்பதாரியானவர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியானவரெனவும் குறித்த பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றார்/ விதித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும் பரீட்சைக் கட்டத்தினைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளாரெனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

................................
வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ இலச்சினையினால் உறுதிப்படுத்துதல்)

(பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

03–346

---

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகம் மற்றும் சிங்கள அகராதி அலுவலகங்களுக்கு உதவியாசிரியர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2021

2021.02.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலூடாக வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோருதல் தொடர்பான அறிவித்தலில் கீழுள்ள திருத்தங்களை செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அவ் உத்தரவுகளை தயவுடன் அறியத்தருகிறேன்.

I. 4.2 (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கீழுள்ள வாக்கியத்தை நீக்குதல்
 * யாதாயினுமொரு வணக்கஸ்தலத்தில்/பிரிவெனாவில் வணக்கஸ்தராக பணியாற்றும் எந்தவொரு நபரும் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவராவார்.

II. 8 ஆம் பிரிவில் VIII ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி, 2021.04.12 ஆந் திகதி வரை நீடிக்கப்படுதல்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

செயலாளர்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,
2021.03.12.

03–682

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.